வீடியோ பார்லர்களின் உரிமங்களை ரத்து செய்ய காவல்துறைக்கு அதிகாரம் உள்ளது. இந்தச் சட்டத்தினை எதிர்த்து வீடியோ பார்லர்களின் உரிமையாளர்கள் தாங்கள் தொழில் நடத்துவதற்கு காவல்துறையிடம் உரிமம் வாங்க வேண்டியதில்லை என்று கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்தனர். அதனை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் வீடியோ பார்லர்கள் நடத்த காவல்துறையினரால் உரிமம் வழங்கப்படும் முறை சரியானது என்று தீர்ப்பு அளித்தது. இதனை அடுத்து வீடியோ பார்லர்கள் உரிமையாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கின் மீது மேல் முறையீடு செய்தனர். உச்சநீதிமன்றம், தமிழக அரசு பிறப்பித்துள்ள சட்டம், அதாவது வீடியோ பார்லர்கள் நடத்துவோர் காவல் துறையினரின் முறையான உரிமத்தைப் பெற வேண்டுமென்ற சட்டம் சரியானதுதான் என்று இடைக்காலத் தீர்ப்பு அளித்தது. ஆகவே, இந்தத் தீர்ப்பினை அடுத்து தமிழ்நாட்டில் வீடியோ பார்லர்களில், Games of chance என்ற முறையில் நடத்தப்படும் வீடியோ விளையாட்டுக்கள் காவல் துறையின் தீவிர நடவடிக்கையால் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

4. கவன ஈர்ப்பு

(அ) பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி நெடுஞ்சாலையில் உள்ள பாலம் பழுதடைந்துள்ளது குறித்து

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி நெடுஞ்சாலையில் உள்ள பாலம் இடிந்து அபாயகரமான நிலையில் இருப்பது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1995 மார்ச் 28

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி நெடுஞ்சாலையில் உள்ள பாலமானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள இதர மாவட்ட சாலையாகிய பூவளூர்—நெய்வேலி சாலையில் கி.மீ. 9/10ல் அமைந்துள்ள பழமையான, வலுவிழந்த, குறுகிய பாலத்தினைக் குறிப்பதாகும். இப்பாலமானது ஒவ்வொன்றும் 6.25 மீட்டர் அகலமுள்ள மூன்று கண்கள் கொண்ட கருங்கல் மூடுபலகை பாலமாகும். இப்பாலத்தினைத் திரும்பக் கட்டுவதற்கு ரூ. 50 லட்சம் தேவைப்படும். இப்பாலத்தினை திரும்பக் கட்டும் பணியானது 1995—96-ம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தில் பழுதடைந்த பாலங்களை திரும்பக் கட்டுதல் என்ற தலைப்பின் கீழ் ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது. இப்பாலப்பணி 1995—96-ல் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். விவர அறிக்கையின்படி 50 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பகுதி—2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு 1995—96-இல் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது குறித்து நான் என்னுடைய மகிழ்ச்சியினையும், நன்றியினையும், பாராட்டையும் தெரிவிக்கின்ற அதே நேரத்தில் இந்த பாலத்தோடு சேர்த்து இடையாத்தி பாலத்தையும், களத்தூர் பாலத்தையும் கட்டவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் மனு கொடுத்து இருந்தேன். அந்த மனுவின்படி அந்தக் களத்தூர் பாலம் இன்று கட்டப்பட்டு வருகிறது. அதற்கும் என்னுடைய நன்றியினையும் பாராட்டையும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, இந்த இடையாத்தி பாலத்தையும் 1995—96—இல் பகுதி—2 திட்டத்தில் கட்டுவதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இதுவும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் கொடுத்த மனுதான் என்பதையும் தெரிவித்து, இதை விரைவில் கட்டுவதற்கு துரித நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 28]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995—96*-ஆம் ஆண்டிற்கான பகுதி—2 திட்டத்தின் கீழ் பழுதடைந்த பாலங்களை திரும்ப கட்டுதல் என்ற தலைப்பின் கீழே இந்த பாலத்திற்கு *50* இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பாலம் இந்த ஆண்டு கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) காகித விலையேற்றத்தினால் நோட்டுப் புத்தகங்களுக்கும், பாடப் புத்தகங்களுக்கும் விலை உயர்வு ஏற்படும் நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா, திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாயந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி. கே. மரியம் உல் ஆசியா.

***திருமதி கே. மரியம் உல் ஆசியா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெளிநாடுகளுக்கு காகிதம் ஏற்றுமதி அதிக அளவில் செய்வதாலும் மத்திய அரசு காகித விலையை உயர்த்தியதாலும் தமிழ்நாட்டில் நோட்டு புத்தகங்களுக்கும் பாடப் புத்தகங்களுக்கும் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால், விலை உயர்வு ஏற்படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

மைய அரசு பாடநூல் மற்றும் குறிப்பேடுகளுக்கு *1990* மார்ச் வரை சலுகை விலையில் தாள் ஒதுக்கீடு செய்து வந்தது. *1-4-1990*-க்கு பிறகு மைய அரசின் சலுகை விலைத்தாள் ஒதுக்கீடு செய்வது